# பாஷையூர் கிறிஸ்தவக் கூத்துக்களின் மீளுருவாக்கம் : ஏற்புடைமைகளும் எதிர்ப்புக்களும்

**துசியந்தி, ப., ரகுராம், சி.**
ஊடகக் கற்கைகள் துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
thusithusipara@gmail.com

*ஈழத்துப் பாரம்பரியக் கூத்துக்களில் கிறிஸ்தவக் கூத்துக்கள் முக்கியமானவை. இவை தனித்துவமான நிகழ்த்துமுறைமையினையும், அழகியல் நுட்பங்களையும், சமூகத்துடனான ஊடாட்டத்தையும் கொண்டுள்ளன. இவ்வாறு காலங்காலமாக ஆடப்பட்டு வந்த கூத்து முறைமையானது காலத்திற்குத் தகுந்தாற் போல மாற்றங்களை உள்வாங்கத் தலைப் பட்டுள்ளன. இந்தவகையில் தற்காலத்தில் பாஷையூர்ப் பிரதேசத்தில் ஆடப்பட்டு வரும் கிறிஸ்தவக் கூத்துக்களானவை அவற்றின் கதை, களம், நேரம், கதாபாத்திரங்கள், ஆடை அணிகலன்கள், ஒப்பனை, இசை, மேடையமைப்பு, பார்வையாளர்களின் நிலை போன்ற விடயங்களில் மீளுருவாக்கம் அடைந்து நிகழ்த்தப்படுவதை அவதானிக்கலாம். சமகாலத்தில் ஏற்பட்டுள்ள தொழில்நுட்ப வளர்ச்சி, ஊடகங்களின் பரவலாக்கம், உலகமயமாதலுக்குள் சிக்குண்ட சமுதாயம் போன்ற காரணிகளால் நொடிக்குநொடி மாற்றங்கள் நிகழ்வது தவிர்க்க முடியாத ஒரு விடயமாகிவிட்டது. இத்தகைய மாற்றங்கள் கிறிஸ்தவக் கூத்துக்களிலும் உள்வாங்கப்பட்டு, அவை மீளுருவாக்கமடைந்து நிகழ்த்தப்பட்டு வருவதை அவதானிக்க முடிகின்றது. இந்நிலையில் இத்தகைய மீளுருவாக்கச் செயற்பாடு இடம்பெறுகையில், ஒருபுறமிருந்து அதற்கு ஆதரவான, அனுகூலமான நிலைமைகள் காணப்படுமிடத்து, மறுபுறமிருந்து அதற்கு எதிரான நிலைமைகளும் உருவாகின்றன. இதனடிப்படையில், இந்த ஆய்வானது யாழ்ப்பாண மாவட்டத்தின் கரையோரப் பகுதியாகிய பாஷையூர்ப் பிரதேசத்தின் கிறிஸ்தவக் கூத்துக்களின் தற்போதைய நிலை, அவற்றில் ஏற்பட்டுள்ள மீளுருவாக்கச் செயற்பாடுகள், அண்ணாவிமார், கூத்துக்கலைஞர்கள், கூத்துக்கலையை தற்காலத்தில் பயிலும் இளைஞர்கள், பார்வையாளர்களிடத்தில் அவை ஏற்படுத்தும் தாக்கங்கள் என்பதைக் கண்டறியும் நோக்கில் மேற்கொள்ளப்பட்டது. இதனடிப்படையில், பாஷையூர்ப் பிரதேசத்தில் இன்றும் ஆடப்பட்டுவரும் தேவசகாயம்பிள்ளை, எஸ்தாக்கியார், அந்தோனியார் ஆகிய கூத்துக்கள் மாதிரிகளாகத் தெரிவு செய்யயப்பட்டன. கள ஆய்வு மற்றும் நேர்காணல்கள் மூலம் இந்தக் கூத்துக்களில் ஏற்பட்டுள்ள மீளுருவாக்கம், அதன் தற்காலப் போக்குகள், அத்தகைய மாற்றங்களை ஏற்றுக் கொள்பவர்கள், அதனை எதிர்ப்பவர்கள், பார்வையாளர்களுடைய நிலை ஆகியவற்றை உள்ளடக்கிப் பெறப்பட்ட பெறுமதிசார் தரவுகள் பகுப்பாய்வு செய்யப்பட்டன. தரவுப் பகுப்பாய்வில் கிடைக்கப் பெற்ற முடிவுகளை அடிப்படையாகக் கொண்டு, பாஷையூர்ப் பிரதேசத்தில் கிறிஸ்தவக் கூத்துக்களில் ஏற்பட்டுள்ள மீளுருவாக்கச் செயற்பாடானது பெரும்பான்மையும் ஏற்றுக் கொள்ளப்படுகிறது என்ற முடிவு கிடைக்கப்பெற்றது. பாரம்பரியக் கிறிஸ்தவக் கூத்துக்கள் அவற்றின் அழகியல் தன்மையுடன் பேணப்பட்டு, அடுத்த தலைமுறையினரிடத்தில் கையளிப்படுவதற்கும் சமூக மாற்றத்துடன் அவற்றைத் தக்கவைப்பதற்கும் மீளுருவாக்கச் செயற்பாடானது சந்தர்ப்பம் தருவதாகவும் ஆய்வின்வழி தெரியவந்தது.*

**திறவுச்சொற்கள் :** கூத்துக்கள், கிறிஸ்தவக் கூத்துக்கள், மீளுருவாக்கம், ஏற்புடைமை